## இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டம் - 2017

இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அதிவிசேட வர்த்தகமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டப் பிரமாணங்களின் 10.3 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நம்புகிறேன்.

## 1.4 திட்டத்தின் குறிக்கோள்கள்

நாணயச் சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 32 E பிரிவின் கீழ் நாணயச் சபையின் தலைவரால் 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதிய 1673/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அதிவிசேட வர்த்தகமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களின் கீழ் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நிதி நிறுவனங்களின் தோல்வியிலிருந்து சிறிய வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை ஆரம்பகட்டமாக வடிவமைத்து, அதனூடாக சிறிய - வைப்பாளர் - நம்பிக்கையினை பேணுவதன் மூலம் நிதி நிறுவனங்களின் நிலைத்திருப்பினை மேம்படுத்துதலே திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் தொழிற்பாடுகள், முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ரூபா 8,839.37 மில்லியனான வரிக்கு முந்திய மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,865.96 மில்லியன் வரிக்கு முந்திய மிகையினை விளைவித்திருந்தமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,026.59 மில்லியன் அல்லது 11.6 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட ரூபா 1,495.41 மில்லியன் அதிகரிப்புக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 2,522 மில்லியனால் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

-----------------------------------------------------------------------

### 3.2.1 நிதியத்தின் நிலைமை

-----------------------------------------

திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை ஆதாரத் திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்திலுள்ள மீதி முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 34,257.3 மில்லியன் நேரொத்த மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,865.96 மில்லியன் அல்லது 28.80 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------

### 3.3.1 செயற்பாட்டின் நிலைமை

-------------------------------------

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்தின் 9.10 ஆம் இலக்க ஒழுங்குமுறையின் அடிப்படையில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் நாணயச்சபையின் கட்டளைப்படி இடைநீக்கல் அல்லது இரத்தாக்கல் விடயமாக 2012 ஜனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்பிலிருந்து நடைமுறைக்கு வரும். 2012 ஜனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்பு எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்தின் அனுமதிப் பத்திரத்தையும் இடைநீக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ நாணயச் சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டு இருக்காத நிலையில் இலங்கை காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்திடமிருந்து நட்டஈடு செலுத்துவதற்கான தேவைப்பாடு 2017 டிசம்பர் 31 வரைக்கும் ஏற்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 இனங்காணப்பட்ட நட்டம்

------------------------------------

2015 ஏப்ரல் 01 இன்படி ரூபா 147.05 மில்லியன் தொகைக்குப் பதிலாக ரூபா 137.18 மில்லியன் தொகையானது 2016 மார்ச் 31 முதிர்வுக் காலமுள்ள நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தில் முதன்மை வணிகருடன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. முதன்மை வணிகர் மேற்குறித்த முதலீட்டின் அடிப்படைப் பத்திரங்களைத் திரும்பப் பெற்றுள்ளதுடன் அத் திரும்பப்பெற்ற பத்திரங்கள் சார்பாக எந்தவொரு பத்திரங்களையும் மீள் ஒதுக்கீடு செய்யவில்லை.

அடுத்ததாக மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2015 டிசம்பர் 04 இல் மேற்கொள்ளப்பட்ட சபையின் தீர்மானத்திற்கு அமைவாக துணை ஈடுகள் எதுவுமன்றி மேற்குறித்த முதலீட்டை அதே ஒப்பந்தத்தில் மீள்முதலீடு செய்யத் தீர்மானித்தது. அதற்கிணங்க மேற்குறித்த முதலீட்டிற்கான பெறுமதிக் குறைவு சலுகை ரூபா 144.25 மில்லியன் தொகையானது 31 டிசம்பர் 2015 இல் திட்டத்தின் நிதிக்கூற்றில் காணப்பட்டது. 2017 டிசம்பர் 31 வரையிலும் கூட மேற்குறித்த முதலீடு செயற்பாட்டிலிருந்ததுடன் 2017 டிசம்பர் 31 வரைக்கும் மேற்குறித்த முதலீடு மீதான முடிவுறுத்தப்படாத வட்டியாக ரூபா 26.24 மில்லியன் இருந்தது.